1975 மார்ச் 12]

பதினெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறும் பைசா எழுபத்தைந்து மட்டும்) செலவாகியது. இந்த பொருட்காட்சியில் கைவினைப் பொருள் கழகம் ரூ. 99,858.75 (ரூபாய் தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டும் பைசா எழுபத்தைந்து மட்டும்) மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்தது.

*292 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் செயல்படத் துவங்கிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த கைவினைப் பொருள் அபிவிருத்திக் கழகமானது பெரிய நகரங்களிலே கண்காட்சி நடத்துவதின் மூலமாக சிறந்த முன்னேற்றமான முறையை ஏற்படுத்தி நம்முடைய கைவினைப் பொருட்கள் அதிகமாக விற்க ஏற்பாடு செய்திருக்கிறது. குறிப்பாக தமிழ் நாட்டிலேயிருந்து தயாரிக்கப்படுகின்ற பாய் போன்றவை அதிகப் படியாக விற்கக்கூடிய அளவிலே அவற்றையும் கண்காட்சியிலே வைத்து விற்க ஏற்பாடு செய்வார்களா? கோரை பாய் தொழிலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்க்கை அடங்கியிருக்கிறது, அதனுடைய விற்பனை தற்போது குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த கைவினைப் பொருள்கள் அபிவிருத்திக் கழகம் அதையும் எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பம்பாயிலே நடைபெற்ற கண்காட்சியிலே பாய் ரூ. 7,302-க்கு விற்றது. டிமாண்டை பொறுத்துத்தான் விற்பனை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள பூம்புகாரிலே கைவினைப் பொருள் கழகம் இன்னும்

துவங்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஏராளமான பேர்கள் அந்த சரித்திரப் புகழ்வாய்ந்த இடத்தைப் பார்க்க வருகிறார்கள், அங்கே இந்த கைவினைப் பொருட்களை வைப்பதால் அந்த இடத்தில் அப்படிப்பட்ட நிலையத்தை ஆரம்பித்தால் அந்த இடத்திற்கும் கீர்த்தி சேரும், வரக்கூடிய மக்களும் அதிகமாக வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அங்கே ஏன் துவக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது உள்ளது பூம்புகார் சேல்ஸ் எம்போரியம் சென்னை, மகாபலிபுரம், நெய்வேலி, சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த ஹாண்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் கடலூர், வேலூர், ஈரோடு, மதுரை, ஊட்டி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்று இந்தக் கழகத்தின் சார்பாக சேல்ஸ் எம்போரியம் ஆரம்பிப்பதற்கு செயற்குறிப்பு இருக்கிறது. மற்ற மாவட்டங்களைப்பற்றி இப்போது பரிசீலனை நடைபெற்று கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Electricity and Industries whether this Development Corporation derived any benefit from the Exhibition held at Bombay and if so, what is the total amount of income derived?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : As I have already stated, the expenditure is Rs. 18,830. The sales was to the extent of Rs. 99,000 and there is a benefit.

திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டு கைவினைப் பொருள்களுக்கு வெளிநாட்டுப் பயணிகளிடம் கிராக்கி இருக்கும் காரணத்தால் இதுபோன்ற விற்பனை நிலையங்களை வெளிநாட்டுப் பயணிகள் நிறைய வருகின்ற பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களில் அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற செயற் குறிப்பு இருக்கிறது. இப்போது கூட நம்முடைய விமான நிலையத்தில் சேல்ஸ் எம்போரியம் ஆரம்பித்திருக்கிறோம்.

1975 மார்ச் 12]

THIRU B. VENKATASWAMY: Most of the ladies in the house are doing this handicraft work. May I know from the Hon. Minister whether this handicraft will be given more prominence and whether he will see that more handicraft goods are produced and sold through the Handicrafts Development Corporation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: There is a proposal to start Poompuhar Sales Emporium in Krishnagiri also. So, my friend will be satisfied with this answer.

Work study of Housing Board

* 293 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a study on the staff position and the nature of work done by the State Housing Board has been undertaken by the Finance Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணி ஆய்வை நிதித் துறையின் அமைப்பு-நடைமுறைப் பிரிவு 5—8—1974 ஆம் நாளிலிருந்து மேற்கொண்டுள்ளது. அது பொறியியல் பிரிவைப் பற்றிய தன் அறிக்கையை முடித்துள்ளது. நிர்வாகம், கணக்கு பிரிவுகளுக்கான அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இதுவரை ஆய்வு செய்யப்பட்டதில் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? மேலும் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அவர்கள் ஆய்வு செய்து கொடுத்த அறிக்கையின்பேரில் ஒவ்வொரு பத்து நாளைக்கும் ஒவ்வொரு பொறியாளர் சென்று எவ்வளவு தூரம் வேலை செய்கிறார்கள் என்ற கணக்கெல்லாம் பார்க்கப்பட்டு வருகிறது. அவர்கள் செய்த ஆய்வு எல்லாம் ஒப்புக்கொண்டு பொறியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு நல்ல அளவில் வேலை நடந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.